# மக்கள் பிரகடனம்

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு


வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு

North East Coordinating Committee ( NECC )

Email: neccsrilanka4@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகவுரை

"மக்கள் பிரகடனம்" எனும் தலைப்பிட்ட இக்கையேட்டை வாசிக்கும் போது, வாசகரான தாங்கள் மனதில் சில பிரதான கேள்விகள் எழும். குறிப்பாக இன்றைய அரசியல் தளத்தில் பிரயோகிக்கப்படுகின்ற சொற்பதங்களான "சுயநிர்ணயம்", "ஒற்றையாட்சி", "சமஷ்டி", "தேசம்", "ஒரு நாடு இரு தேசம்", ஆகியவற்றிற்கான அரசியல் மற்றும் சட்ட அடிப்படையிலான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புவீர்கள். இவ் அறிமுகவுரையில் இவை குறித்து சுருக்கமாக உரையாட முனைகிறோம். இதன் மூலம் இம் மக்கள் பிரகடனம் முன்வைத்துள்ள "ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு" எனும் அரசியல் நிலைப்பாட்டை மேலும் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியும் எனக் கருதுகிறோம்.

"ஈழத் தமிழர்" எனும் அடையாளப் பெயரைக் கொண்ட இலங்கையின் வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள், 1948ஆம் ஆண்டு சுதந்திரத்துக்குப் பின்னர் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய சிங்களப் பெரும்பான்மை அரசுகளின் திட்டமிட்ட இனவாத அடக்குமுறைகளின் காரணமாக தம்மை தனித்துவமான ஒரு தேசிய இனமாக இனங்கண்டனர். அதன் அடிப்படையில் தாம் பாரம்பரியமாக வாழும் வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் தமக்கான கௌரவமான அரசியல் உரிமைகளைக் கோரினர். எனினும், தமிழர்களின் ஜனநாயகக் கோரிக்கைகள் ஒடுக்கப்பட்டன. மறுபுறம், ஈழத் தமிழரின் சுயநிர்ணய உரிமைக்காக பல்வேறு போராட்ட அமைப்புகள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடத்தொடங்கினர்.

1980களின் தொடக்கத்தில் ஐந்து பிரதான ஆயுதப் போராட்ட அமைப்புகள் இருந்தன. 1983 ஜுலையில் தமிழர் மீது நாடுதழுவிய அளவில் கட்டவிழ்த்து விடப்பட்ட இன வன்முறையோடு உள்நாட்டு யுத்தம் வலுக்கத் தொடங்கியது. இந்நிலையில், இலங்கை நாட்டுக்குள் நடைபெறும் இன அடக்குமுறைக்கும் ஆயுத மோதலுக்கும் அரசியல் ரீதியில் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை இந்தியா ஏற்பாடு செய்தது. அதன்படி, பூட்டான் நாட்டின் தலைநகரான திம்புவில் 1985ம் ஆண்டு நடுப்பகுதியில் இந்திய மத்தியத்துவத்துடன் இலங்கை அரசின் பிரதிநிதிகளுக்கும் தமிழர் தரப்புக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன[1]. தமிழர் தரப்பில் ஐந்து ஆயுதப் போராட்ட அமைப்புகளும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியும் (TULF) கலந்துகொண்டனர்.

தமிழர் தரப்பினரால் நான்கு பிரதான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இவையே "திம்பு கோட்பாடுகள்" அல்லது "திம்பு பிரகடனம்" என அறியப்படுவனவாகும். அவையாவன:

1. இலங்கை தமிழர் ஒரு தனியான தேசமாக அங்கீகரிக்கப்படல்
2. இலங்கை தமிழருக்கு அடையாளப் படுத்தப்பட்ட தாயகப் பிரதேசம் இருப்பதை அங்கீகரித்தல்
3. தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்
4. அனைத்து இலங்கைத் தமிழர்களினதும் அடிப்படை உரிமைகளையும் பிரஜாவுரிமையையும் அங்கீகரித்தல்

சுருக்கமாகக் கூறின், "தேசியம், தாயகம், சுயநிர்ணயம்" என்பனவே திம்புக் கோட்பாடுகளின் சாராம்சமாகும். இம் மூன்று கோரிக்கைகளும் இலங்கையின் இறையாண்மையை மீறுவதாகக் கூறி இம்மூன்று கோரிக்கைகளையும் இலங்கை அரசு நிராகரித்துவிட்டது. அத்துடன் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தன.

மேற்குறிப்பிட்ட "தேசியம்", "தாயகம்", "சுயநிர்ணயம்" ஆகியன அரசியல் ரீதியான எண்ணக்கருக்களாகும். குறிப்பிட்ட மக்கள் சமூகத்தின் அரசியல் அபிலாஷைகளாகும். அவற்றை சற்று விரிவாகப் பார்ப்போம்.

## 1) தேசம் அல்லது தேசிய இனம் என்றால் என்ன? [2]

நாடு என்பதும் தேசம் என்பதும் ஒன்றல்ல. உதாரணத்திற்கு இலங்கை என்பது தனக்கான அரச கட்டமைப்பைக் கொண்ட நாடாகும். தேசம் என்பது மக்கள் சமூகத்தைக் குறிப்பதாகும். தமக்கான பொது மொழி

---

[1] Thimpu Principles, https://en.wikipedia.org/wiki/Thimpu_principles

[2] The Nation, Kevin Harrison and Tony Boyd, 2018, Manchester Openhive, https://www.manchesteropenhive.com/display/9781526137951/9781526137951.00006.xml?chapterBody=pdf



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது மதம் பொதுப் பண்பாடு, பாரம்பரியம் பொதுவான வரலாற்று உணர்வு மற்றும் அரசியல் அபிலாஷைகளைக் கொண்ட மக்கள் தம்மை ஒரு தேசமாக உணர்வதாக, இனங்காண்பதாக மானுடவியலாளர்கள் கூறுகின்றனர்.

ஒரு நாட்டில் ஒத்த மொழியைப் பேசும் மக்கள் சமூகத்தினர் அனைவரும் ஒரு தேசமாக இணைவார்கள் என்றில்லை. இதற்கு சிறந்த உதாரணம் ஈழத்தமிழரும், மலையகத் தமிழரும், முஸ்லிம்களும் ஆவர். மூன்று மக்கள் சமூகத்தினரும் தமிழ் மொழியை தமது தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும் தம்மை ஒரே தேசமாக உணர்வதில்லை. அதேபோன்று பாகிஸ்தானில் பங்ளா மொழி பேசிய முஸ்லிம்களும் உருது மொழி பேசுகிற முஸ்லிம்களும் வாழ்ந்தனர். உருது மொழிபேசும் மேற்குப் பகுதி பாகிஸ்தானிய முஸ்லிம்களால் பங்ளா மொழி பேசுகிற கிழக்குப் பாகிஸ்தான் முஸ்லிம்கள் ஒடுக்கப்பட்டதாலும், உருது மாத்திரம் அரச கரும மொழியாக மாற்றப்பட்டதாலும் போராட்டங்கள் வெடித்து இறுதியில் பங்களாதேஷ் தனிநாடாக பிரிந்தது.[3] ஒரு நாட்டில் பல தேசங்கள் வாழ முடியும். தம்மைத் தனியான தேசங்களாக இனங்காணும் மக்கள் சமூகத்தினர் அனைவருமே அரசியல் சுய நிர்ணய உரிமை கோருவார்கள் என்றில்லை.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில், தமக்கான நிலப்பிரதேசத்தை வரலாற்றுக்கு முந்தைய காலந்தொட்டு (இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள்) கொண்டிருத்தல், பாரம்பரியமாக விவசாயம், மீன்பிடி, கடல் வாணிபம், விலங்கு வேளாண்மை அடங்கலாக இயற்கையோடு இணைந்த தொழில்களின் மூலம் தமக்கான பொருளாதாரத்தை காலனித்துவ ஆட்சிக்கு முன்னரே உருவாக்கிக் கொண்டமை, தமக்கான வளமான மொழியைக் கொண்டிருப்பதன் மூலம் தனித்துவமான மொழி ரீதியான இனமாக தம்மை இனங்காணல், பண்பாடு, ஆகியவற்றோடு சிங்களப் பேரினவாத

---

[3] Bangladesh at 50: A Nation Created in Violence and Still Bearing Scars of a Troubled Birth, Tazreena Sajjad, 2021, American University, Washington DC, https://www.american.edu/sis/news/20210312-bangladesh-at-50-a-nation-created-in-violence-and-still-bearing-scars-of-a-troubled-birth.cfm



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்குமுறைகளின் விளைவான பொதுவான துயர வரலாற்றுணர்வு, தமக்கான அரசியல் அபிலாஷைகள் ஆகியனவற்றால் ஈழத் தமிழர் தனித்துவமான மக்கள் சமூகமாக தம்மை இனங்காண்கின்றனர். இதையே "ஈழத் தமிழர் ஒரு தேசம்" என தமிழ்த் தேசிய அரசியலாளர்கள் கூறுகின்றனர்.

சிங்கள சமூகத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் காலனியத்துவத்திற்குப் பின்னர் வரையிலும் கூட தம்மை "உட ரட்ட சிங்கள" (மேல்நாடு அல்லது கண்டியச் சிங்களவர்கள் - இது கண்டி மற்றும் உயர் நிலப் பிரதேசத்தில் வாழ்பவர்களைக் குறிக்கிறது – Kandyan Sinhalese) மற்றும் "பஹத்த ரட்ட சிங்கள" (கீழ் நாட்டு சிங்களவர்கள் - இது தாழ்நிலத்தில் வாழ்பவர்களைக் குறிக்கிறது Low country Sinhalese) என்றே அடையாளப்படுத்தி வந்தனர். ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில்[4] சட்ட சபைக்கு உள்ளூர் மக்களின் பிரதிநிதிகளை, அதாவது இலங்கையர்களை நியமிக்கையில், கண்டியச் சிங்களவர், தாழ்நிலச் சிங்களவர் எனப் பிரித்தே பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனினும், 1950களில் சிங்கள சமூகத்தில் உருவான அரசியல் எழுச்சி (பஞ்ச மகா சக்தி) மற்றும் தனிச் சிங்கள சட்டம் உருவாக்கப்பட்டமை,[5] அரச சேவைகளில் முன்னுரிமை, மகாவலி குடியேற்றங்கள் மற்றும் சலுகைகள் ஆகியன அவர்கள் மத்தியில் தாம் பெரும்பான்மையினர் எனும் பெருமித உணர்வுகளை உருவாக்கியது. இவற்றோடு, சிங்கள மொழி, பௌத்த மத பாரம்பரியம், காலனிய அடக்குமுறையினால் புறக்கணிப்புக்கு உள்ளான வரலாற்று உணர்வு, இலங்கையைத் தவிர தமக்கு வேறு நாடில்லை எனும் கழிவிரக்கம், சிறுபான்மையினர் மீதான சகிப்புணர்வின்மை போன்ற பல

---

[4] Legislative Council of Ceylon, https://en.wikipedia.org/wiki/Legislative_Council_of_Ceylon#Official_members

[5] S.W.R.D. Bandaranayake, https://en.wikipedia.org/wiki/S._W._R._D._Bandaranaike#:~:text=Bandaranaike%20continued%20his%20policies%20stated,%2C%20teachers%2C%20farmers%20and%20workers.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணிகளால் சிங்கள சமூகத்தினர் "கண்டிய சிங்களவர் – தாழ்நிலச் சிங்களவர்" எனும் வேறுபாடுகளைக் கடந்து ஒரே சிங்கள தேசமாக உருப்பெற்றுள்ளனர். தேசங்களாக மக்கள் பரிணமிப்பது ஒரு அரசியல் நிகழ்வுப்போக்கு ஆகும். இலங்கையில் சிங்கள மற்றும் ஈழத் தமிழ் தேசங்களின் உருவாக்கம் காலனியத்துக்குப் பின்னரே திடமாக உருவானது. இப்படியாக, தற்போது இலங்கை நாட்டில் இரு தேசங்கள் உள்ளன. இதுவே, "ஒரு நாடு இரு தேசம்" என்பதன் பொருளாகும். எனினும்; இலங்கை அரசு இரு தேசங்கள் என்பதை அங்கீகரிக்கவில்லை.

அப்படியானால், முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்களுக்கு தேசங்கள் இல்லையா என சிலர் கேட்கலாம். ஏற்கனவே, முஸ்லிம் தேசம், மலையகத் தேசம் எனும் உரையாடல்கள் வெளிப்பட்டிருந்தாலும் எந்தளவுக்கு தேசிய உருவாக்கம் நிகழ்ந்துள்ளது என்பதை எம்மால் மதிப்பிட முடியாதுள்ளது. இச்சமூகங்களை இனத்துவ சிறுபான்மையினர் (ethnic minorities) என சில அரசியலாளர்கள் கூறுகின்றனர்.

2) சுயநிர்ணய உரிமை (Right to Self Determination) என்றால் என்ன?

சுருக்கமாக் கூறின் சுயநிர்ணயம் என்பது தமது அரசியல் தலைவிதியை தாமே தீர்மானிக்கும் உரிமையாகும். இது சார்ந்து அறிவியலாளர்கள் பல்வேறு வரையறைகளை முன்வைத்துள்ளனர். சுயநிர்ணயக் கொள்கையானது பிரிந்து செல்வதை மாத்திரம் எப்போதும் குறிக்காது.

சுயநிர்ணய உரிமை பற்றிய சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடானது மக்கள் சமூகத்தினரே (people) சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதாகும். சிறுபான்மையினருக்கு (minorities) அல்ல. இங்கு "மக்கள்" எனக் குறிப்பிடுவது தமக்கான பொது நிலப் பிரதேசத்தையும் பொது அடையாளத்தையும் கொண்ட மக்களையாகும். அறிவியலாளர்களின் விளக்கத்தின்படி, தமக்கான பொதுவான வரலாறு, மொழி, பண்பாடு, பாரம்பரியம், இனத்துவ அடையாளம், பொது நிலப் பிரதேசம், அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிலாஷைகளைக் கொண்ட மக்கள் சமூகத்தினராகும். இவர்களுக்கே சுயநிர்ணய உரிமை உண்டு.[6]

சர்வதேச சமூகத்தின் விளக்கத்தின்படி சிறுபான்மையினர் என்போர் மக்களில் இருந்து வேறுபடுகின்றனர். சிறுபான்மையினர் என்போர் ஒரு நாட்டின் சனத்தொகையில் எண்ணிக்கையில் குறைந்தவர்கள், இவர்கள் தமது நாட்டின் பிரஜைகளாக இருப்பதோடு இவர்களின் மொழி, பண்பாடு, மதம் ஆகியன பாதுகாக்கப்பட வேண்டியனவாகும். மக்களுக்கும் சிறுபான்மையினருக்கும் இடையிலான குறிப்பான வேறுபாடு சிறுபான்மையினர் பிரதிநிதித்துவ அரசாங்கத்தைக் கொண்ட ஒரு நாட்டில் வாழ்வதோடு அவர்களுக்கு அரசியல் சுயாதீனம் அவசியப்படாது.[7]

பிரதானமாக சுயநிர்ணய உரிமையானது, வெளியக சுயநிர்ணய உரிமை மற்றும் உள்ளக சுயநிர்ணய உரிமை என இருவகைப்படும்.[8]

வெளியக சுயநிர்ணய உரிமை என்பது, ஒரு மக்கள் சமூகம் வெளியாரின் தலையீட்டுக்கு உட்பாடாது பிரிந்து சென்று தமக்கான புதிய ஒரு அரசை உருவாக்கிக் கொள்ளுவதும் தமது அரசியல் நிலையைத் தீர்மானிப்பதும் ஆகும்.

உள்ளக சுயநிர்ணய உரிமை என்பது ஒரு நாட்டில் வாழும் மக்கள் சமூகம் சுயாதீனமாக, வெளித் தலையீடின்றி தம்மைத் தாமே ஆளுவது ஆகும். சமஷ்டி என்பது உள்ளக சுயநிர்ணயத்தின் ஒரு வடிவமாகும்.

---

[6] Self Determination: Historical Underpinnings, Milena Sterio, 2018, https://www.elgaronline.com/display/9781785361210/09_chapter1.xhtml
[7] Ibid
[8] Legal Aspects of Self Determination, Hurst Hannum, Princeton University, https://pesd.princeton.edu/node/511#:~:text=Internal%20self%2Ddetermination%20is%20the,of%20their%20own%20independent%20state.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3) ஒற்றையாட்சி (Unitary government) என்றால் என்ன?

1987ம் ஆண்டு, இந்திய - இலங்கை உடன்படிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட 13வது திருத்தச்சட்டமானது இலங்கையின் அரசியலமைப்பில் இணைக்கப்படுவதற்காக முன்வைக்கப்பட்ட சட்ட மூலம் (The 13th Amendment to the Constitution Bill) மற்றும் மாகாண சபைகள் சட்ட மூலம் (The Provincial Councils Bill) ஆகியவற்றை எதிர்த்து அன்றைய பிரதான எதிர்க்கட்சி உட்பட பலர் உச்ச நீதிமன்றத்தில் (Supreme Court) வழக்குத் தொடுத்தனர்.

இவர்கள் முன்வைத்த பிரதான வாதம்:

1978ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை இரண்டு ஆனது, இலங்கை என்பது ஒரு ஒற்றையாட்சி நாடு எனக் கூறுகிறது. 13வது திருத்தச்சட்ட மூலமும், மாகாண சபைகள் சட்டமூலமும் ஒற்றையாட்சிக்கு எதிரானவை, மாகாண சபைகளுக்கு சட்டவாக்கல் அதிகாரம் வழங்குவது இறைமையை அவற்றுக்கு வழங்குவதாகும், நாட்டின் இறைமை பகிரப்படும் என்பதாகும்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகளில் பெரும்பான்மையானோரின் நிலைப்பாடு:

"...ஒற்றைாட்சி அரசில், மத்திய அரசானது சட்டபூர்வமாக ஏனைய அனைத்து மட்டங்களையும்விட உயர்வானதாகும். ஒற்றையாட்சியின் சாராம்சமே இறைமை பிரிக்கபடாததாகும். வேறுவார்த்தைகளில் கூறுவதானால் மத்திய அரசின் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட முடியாதவை. ஒற்றையாட்சியின் இரு பிரதான அம்சங்கள்

(1) மத்திய பாராளுமன்றமே மேலாதிக்கமுடையது

(2) இறைமையுள்ள உப அங்கங்கள் அங்கு கிடையாது. இதன் அர்த்தம் சட்டவாக்கல் அதிகாரமுள்ள உப அங்கங்கள் ஒற்றையாட்சியில் கிடையாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதில்லை. அவை இருக்கலாம். ஆனால் மத்திய பாராளுமன்றத்தின் விருப்புரிமைக்கு அமைய நீக்கப்பட முடியும். ...”[9]

மேற்படி தீர்ப்பானது ஒற்றையாட்சிக்குள் மேற்கொள்ளப்படும் அதிகாரப் பரவலாக்கம் உண்மையான அதிகாரங்களை பிராந்திய மக்களுக்கு வழங்காது, மத்திய பாராளுமன்றத்தின் விருப்பத்திற்கமைய எந்நேரமும் கலைக்கப்படலாம் என்பதாகும்.

4) சமஷ்டி (இணைப்பாட்சி)[10] என்றால் என்ன?

மேற்படி, 13வது திருத்தத்திற்கான சட்ட மூலம் தொடர்பான வழக்கில், சமஷ்டி குறித்து நீதிபதிகள் அளித்த விளக்கம்:

“சமஷ்டி அரசில், அரசாட்சியானது சமஷ்டி அரசுக்கும் மத்திய அரசுக்கும் (State government) இடையே பிரிக்கப்படும். இவை ஒன்றுக்கு ஒன்று கீழானதல்ல. ஆனால், தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள தளத்தில் இணைந்தும், சுயாதீனமாகவும் இயங்கும். சமஷ்டிக் கொள்கையின் சாராம்சமே ஒன்றுக்கொன்று சுயாதீனமான, அதே நேரம் ஒருங்கிணைந்த அதிகாரங்கள் நிலவுவதாகும். சில விடங்களில் சமஷ்டி அரசு இறைமையுடையதாக இருக்கும். சில விடயங்களில் மத்திய அரசு இறைமையுடையதாக இருக்கும். இரண்டும் ஒன்றையொன்று கட்டுப்படுத்தாமலும் கீழ்ப்படாமலும் தமக்குத் தமக்குரிய தளங்களில் தமது அதிகாரங்களை மேற்கொள்வதாகும். இந்த அம்சமே சமஷ்டி முறையிலிருந்து ஒற்றையாட்சி அரசியலமைப்பை

---

9 Canishka G. Witharana, Unitary State of SriLanka and the 13th Amendment, 2017, Desarasa, Maharagama, SriLanka

10 சந்திரசோம எதிர் மாவை சேனாதிராஜா வழக்கில் தமிழரசு கட்சிக்காக வாதாடிய சட்டத்தரணிகள், சமஷ்டி எனும் சமஸ்கிருத சொல்லிற்கான தமிழ்ச் சொல் “இணைப்பாட்சி” என்பதாகும் என விளக்கினர். இந்த விளக்கத்தை அரசகரும மொழிகள் ஆணையகமும் அங்கீகரித்தது. Mavai Senathiraja’s land mark decision, Walter Wuthmann, Daily News, September 20,2017, https://www.dailynews.lk/2017/09/20/features/128687/mavai-senathirajah%E2%80%99s-landmark-decision



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபடுத்திக் காட்டுவதாகும். ஒற்றையாட்சியில் இறைமை மத்திய அரசிடம் மாத்திரமே காணப்படும்."[11]

**6) "சந்திரசோம எதிர் மாவை சேனாதிராஜா" (Chandrasoma Vs Senathirajah case (SC Spl 03/2014) வழக்கில் சமஷ்டி அல்லது இணைப்பாட்சி குறித்த உச்ச நீதிமன்றின் தீர்ப்பு[12]**

இலங்கைத் தமிழரசுக் கட்சியானது சமஷ்டிக் கொள்கையை முன்வைத்து உருவான கட்சியாதலால் அது சமஷ்டிக் கட்சியென்றே அறியப்பட்டு வருகிறது. ஆங்கிலத்தில் "Federal Party" என்றே குறிப்பிடப்படுகிறது.

2014ம் ஆண்டு களனிப் பகுதியைச் சார்ந்த ஹிக்கடு கோரளகே டொன் சந்திரசோம என்பவர் Hikkadu Koralalage Don Chandrasoma இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராக வழக்குத் தொடுத்தார். இவரின் வாதமானது தமிழரசுக் கட்சியானது தனியரசு அமைக்க முயல்கிறது. இது இலங்கை அரசியலமைப்பின் ஆறாவது திருத்தச்சட்டத்துக்கு மாறானதாகும். அவர்கள் சுயநிர்ணயத்திற்காக வாதாடுகின்றனர். சுயநிர்ணமானது அதனளவில் பிரிவினையை உள்ளடக்கியுள்ளது என வாதிட்டார்.[13]

"சுயநிர்ணய உரிமை ஒரு உள்ளகப் பரிமாணத்தைக் கொண்டுள்ளது என்பதும், அது அந்நாட்டில் வாழும் "மக்களின்" நன்மைக்காக

---

[11] Canishka G. Witharana, Unitary State of SriLanka and the 13$^{th}$ Amendment, 2017, Desarasa, Maharagama, SriLanka

[12] Federalism is not Separatism: the Supreme Court de-demonizes Federalism, Sanjeewa Fernando, Daily Mirror, 1 November 2017, https://www.dailymirror.lk/article/Federalism-is-not-Separatism-the-Supreme-Court-de-demonizes-Federalism-139514.html

[13] Mavai Senathiraja's land mark decision, Walter Wuthmann, Daily News, September 20,2017, https://www.dailynews.lk/2017/09/20/features/128687/mavai-senathirajah%E2%80%99s-landmark-decision



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நாட்டுக்குள் பிரயோகிக்கப்பட முடியும் என்பதும் தெளிவாயுள்ளது" என உயர் நீதியரசர் பிரியசத் டெப் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.[14]

**இத்தீர்ப்பின் முக்கியமான அம்சங்களாவன:[15]**

- சமஷ்டி என்பது அதனளவில் பிரிவினையல்ல. எனவே அது அரசியலமைப்புக்கு மாறானதல்ல
- ஒரு தேசம் எனும் வகையில் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை என்பது அரசியலமைப்புக்கு உரியது மாத்திரமல்ல அது ஒரு உலகளாவிய உரிமையுமாகும்
- இலங்கைத் தமிழரசு கட்சி போன்ற கட்சிகள் தமது சட்ட உரிமைக்குள் சமஷ்டிக் கொள்கையை ஊக்குவிக்க முடியும்
- அரசுகளை ஒற்றையாட்சி அல்லது சமஷ்டி என முத்திரையிடுவது பிழையாக வழிநடத்துவதாகும். ஏனெனில் அதிகாரப் பரவலாக்கம் சார்ந்து வேறுபட்ட நிலைகள் இருக்க முடியும்

இதன் மூலம் வடக்கு கிழக்கு வாழ் தமிழர்கள் (ஈழத் தமிழர்கள்) சிறுபான்மையினரல்ல சுயநிர்ணயத்திற்கு உரித்துடைய "மக்கள்" என்பதும் அவர்கள் ஒரு "தேசம்" என்பதும் சட்டத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் சமஷ்டி அல்லது இணைப்பாட்சி என்பது இலங்கையின் அரசியலமைப்பிற்கு உட்பட்டது என்பதையும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு உறுதிசெய்துள்ளது.

---

[14] Ibid

[15] Federalism is not Separatism: the Supreme Court de-demonizes Federalism, Sanjeewa Fernando, Daily Mirror, 1 November 2017, https://www.dailymirror.lk/article/Federalism-is-not-Separatism-the-Supreme-Court-de-demonizes-Federalism-139514.html



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6) வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம் மக்களின் உரிமைகள்

இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு, ஈழத் தமிழர்களுக்கு சுயநிர்ணயம் எனும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகையில் அவற்றோடு இப்பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு என்ன தீர்வு என்பதும் எழுகிறது.
வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்கள் தமக்கான வாழ்நிலம், பண்பாடு, மொழி (தமிழ் மொழி), மதம் ஆகியவற்றைக் கொண்ட தனித்துவமான மக்கள் பிரிவினர் ஆவர். இலங்கையில் வாழும் ஏனைய முஸ்லிம் மக்களிலிருந்து இவர்கள் வேறுபட்டுள்ளனர். குறிப்பாக வடக்கு கிழக்கை தமது பூர்வீகமாகக் கொண்டிருப்பதால் இவர்களின் வாழ்வு வடக்கு கிழக்கோடு பிணைந்துள்ளது. அவ்வகையில், ஈழத் தமிழருக்கு அரசியல் தீர்வு என்று வரும்போது அது இங்குவாழும் முஸ்லிம்களின் உரிமைகளையும் பிணைத்தே உள்ளது.

சமஷ்டி அமைப்பில் வடக்கு கிழக்கு வாழ் மக்கள் எனும் வகையில் அனைத்து உரிமைகளும் முஸ்லிம்களுக்கு உறுதிப்படுத்தப்பட வேண்டும். வடக்கு கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கு தனியான நிர்வாக அலகு என்பதும் உரையாடலில் உள்ளது. முஸ்லிம் மக்களின் விருப்பத்திற்கமைய இதுவும் ஜனநாயகமான முறையில் தீர்மானிக்கப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கில் ஈழத் தமிழருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே கடந்த காலத்தில் உருவான கசப்புணர்வுகளும் சந்தேகங்களும் இன்றுவரையிலும் நீடிக்கிறது. அந்தந்த சமூகங்கள் தத்தமது உரிமைகளுடன் ஒருவரை ஒருவர் சிறுமைப்படுத்தாமலும் ஒருவரின் உரிமைகளை மற்றவர் மதித்தும் கூட்டாக வாழும் ஒரு ஏற்பாடு உருவாக்கப்பட வேண்டும்.

நன்றி
வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு
10 மே 2023

Email:- neccsrilanka4@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ்பேசும் மக்களான நாம், அதிகாரப் பகிர்வு கோரிய எமது தொடர் நூறு நாட்கள் செயல்முனைவின் நூறாவது நாளான, 8 கார்த்திகை 2022 ஆகிய இன்றைய தினம், வடக்கு கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களுக்கான நிலைபேறான அரசியல் தீர்வுக்கான மக்கள் பிரகடனத்தை முன்வைக்கிறோம்.

கடந்த காலங்களில் இனப்பிரச்சினைக்கான தீர்வாக ஆட்சியாளர்களால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டங்களைக் கருத்திற்கொண்டும், 13வது திருத்தத்தின் சாராம்சத்தைப் பரிசீலித்தும், குறிப்பாக 2002ம் ஆண்டு நோர்வே நாட்டின் மத்தியத்துவத்துடன் அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் வழிநடாத்தலில் திரு. ஜி. எல். பீரிஸ் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினால் ஒஸ்லோ உடன்படிக்கை மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட "ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான தீர்வு" என்பதனை சீர்தூக்கிப் பார்த்தும் இந்தப் பிரகடனம் மக்களின் குரலாக வெளிப்படுகிறது.

தமிழ் பேசும் மக்கள் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வரலாற்றுக்கு முந்தைய காலம்தொட்டு பாரம்பரியமாக தமக்கேயான தனித்துவமான அடையாளத்துடன் வாழ்ந்து வருகின்றனர். இப்பிராந்தியத்தில் எண்ணிக்கைப் பெரும்பான்மையினரான தமிழ் மக்களுடன் எண்ணிக்கைச் சிறுபான்மையினரான தமிழ்பேசும் முஸ்லிம் மக்களும் வாழ்ந்து வருகின்றனர். ஆட்சிக்கு வந்த சிங்கள பெரும்பான்மை அரசுகள் தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட முறையில் மேற்கொண்டுவந்த இனவாத அடிப்படையிலான அரசியல், மொழி, பொருளாதார, சமூக ரீதியான அடக்குமுறைகள் மற்றும் வன்முறைகளின் காரணமாகவே வடக்கு, கிழக்கு வாழ் மக்களுக்கு ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துள் மாகாண முறைமையிலான தீர்வு வழங்கப்பட வேண்டும், தமிழ் மொழியும் அரச கரும மொழியாக அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என 13வது திருத்தச்சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. எனினும், 2006ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாண அலகு பிரிக்கப்பட்டு வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாக்கப்பட்டன.

1987இல் மேற்கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கை மூலமான 13வது திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டு இற்றுடன் 35 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது. இந்தக் கால இடைவெளியில் இலங்கை அரசினால் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதுடன் தமிழர்கள் மீது போர்க்குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. தொடர் இடப்பெயர்வு மற்றும் பலவருடகால அகதிமுகாம் வாழ்வை அனுபவித்தனர். போரினால் இருப்பிடங்களும், சொத்துக்களும், வாழ்வாதாரங்களும் மரங்கள் உட்பட முற்றாக அழிக்கப்பட்டன. பயங்கரவாதத் தடைச்சட்டதின் மூலம் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இராணுவமயமாக்கம், திட்டமிட்ட முறையிலான நில அபகரிப்பு, மனித உரிமை மீறல்கள் காரணமாக பாரிய அச்சுறுத்தலை இன்றுவரையில் தமிழ் மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே, வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக எதிர்கொண்டுவரும் அரசியல் அடக்குமுறைகளை முடிவுக்குக் கொண்டுவந்து, கௌரவமான, உரிமைகளுடன் கூடிய வாழ்வை வாழ்வதற்கு அடிப்படையான நிலைபேறான அரசியல் தீர்வொன்றின் அவசியத்தை வலியுறுத்துகிறோம்:

1. வடக்கு கிழக்கு மாகாணங்கள் மீள ஒருங்கிணைக்கப்பட்டு வடக்கு கிழக்கு தனி ஒரு மாகாண அலகாக உருவாக்கப்பட வேண்டும்
2. ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மத்திய அரசினால் மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும்
3. ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாண அலகின் ஆட்சியானது மக்களால் ஜனநாயகமான தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டும். இதில் பெண்கள் ஐம்பது வீதம் இருப்பது உறுதிசெய்யப்பட வேண்டும்
4. முதலமைச்சர் மக்கள் பிரதிநிதிகள் சபையின் தலைமை உறுப்பினராக திகழ்வார்
5. ஆளுநர் என்பவர் மாகாணத்தின் மக்கள் பிரதிநிகள் சபையைக் கட்டுப்படுத்தாதவராகவும் மத்திய அரசின் கௌரவ பிரதிநிதியாகவும் இருக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட காணிகள் யாவும் மாகாண ஆட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும்
7. மாகாண மக்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக்கொண்ட அபிவிருத்திசார் சர்வதேச ஒப்பந்தங்களை மாகாண ஆட்சி மேற்கொள்ளும் அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டும். இதில் சர்வதேச வணிகம், தொழில்துறை அபிவிருத்தி, நகரமயமாக்கல் அடங்கலான கட்டுமான அபிவிருத்தி ஆகியன அடங்கல் வேண்டும்
8. காணி மற்றும் மாகாண ஆட்சியின் அதிகாரத்துக்கு உட்பட்ட ஏனைய அனைத்து விவகாரங்கள் சார்ந்தும் சட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தும் அதிகாரம் மாகாண ஆட்சிக்கு வழங்கப்பட வேண்டும்
9. மாகாண அலகிற்கான பொலிஸ், உளவுத்துறை சேவைகள் மாகாண ஆட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும்
10. நீதித்துறை, அரச நிர்வாகம், கல்வி, பொதுச்சுகாதாரம், பொதுப்போக்குவரத்து, தொலைத்தொடர்பு, மின்சாரம், எரிபொருள் அடங்கலான ஏனைய அனைத்து துறைகளும் கவனத்திற் கொள்ளப்பட்டு மாகாண ஆட்சிக்குள்ள அதிகாரங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்
11. தற்போது வடக்கு கிழக்கில் காணப்படும் இராணுவமயமாக்கல் முற்றிலும் நீக்கப்பட்டு, தேசிய பாதுகாப்பிற்கான இராணுவம் என்பது 1983களுக்கு முன்னர் இருந்த இடங்களில் மாத்திரம் நிலைநிறுத்தப்பட வேண்டும்
12. தற்போதைய சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் கரையோரப்பாதுகாப்பு நடவடிக்கைகளை மிதக்கும் கடற்படைத்தளங்களை தேவையான கடற்பிரதேசங்களில் மத்திய அரசு அமைக்க வேண்டும். இதன்மூலம் மக்கள் காணிகள் இராணுவத்தின் வசமிருந்து விடுவிக்கப்படுவதுடன் இயல்புவாழ்வை மீளப்பெற முடியும்
13. இலங்கையின் மத்திய அரசானது, வடக்கு கிழக்கு மாகாண அலகு பொருளாதாரப் பலம் அடைவதற்காக குறிப்பிட்ட காலம்வரையில் தேவையான நிதிசார் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும்
14. தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை, பல்வேறுபட்ட மனித உரிமை மீறல்கள் சார்ந்து பொறுப்புக் கூறும் கடப்பாட்டை இலங்கை அரசு கொண்டுள்ளது. எனவே சர்வதேச சட்டங்களுக்கு அமைய ஐ.நா.வின் வழிகாட்டலில் சர்வதேச நாடுகளுடன் இணைந்து நீதிப்பொறிமுறைகளை உருவாக்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்க வேண்டும்
15. வடக்கு, கிழக்கு மாகாண அலகானது மாகாணத்துக்குள் வாழும் அனைத்து இன, மத மக்கள் மத்தியிலும் சகவாழ்வு, இன-மத நல்லிணக்கம், ஒருமைப்பாடு, சகோதரத்துவம் ஆகிய நிலைபேறான கொள்கைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைப்படுத்தும் சட்டங்களையும், திட்டங்களையும் உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும்

16. மத்திய அரசானது, இலங்கை நாட்டின் மக்கள் அனைவரினதும் ஜனநாயக வாழ்வு, இன நல்லிணக்கம், சகவாழ்வு, ஒருமைப்பாடு, சகோதரத்துவம் ஆகிய மனிதப் பண்புகளை கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்

வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு ஐக்கிய இலங்கைக்குள் மீளப்பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு இலங்கை அரசுக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்க நாம் அயலிலுள்ள நட்புநாடான இந்தியாவையும், அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, ஜேர்மன், அடங்கலான மையக்குழு நாடுகளையும், ஐரோப்பிய ஒன்றியத்தையும், ஐ.நா.சபையையும் கோருகிறோம்.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு,

இலங்கை

08 கார்த்திகை 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org